# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 097/2017/ந

ஆணை எண்: 183/2017

நாள்: 10/07/2017

திரு. ரோட்ராக்ட் முஹம்மத் இம்ரான்.T,
3/9, தாதா வீதி, பேர்ணாம்பட்டு,
வேலூர் மாவட்டம். – **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
வேலூர் மாவட்டம். – **எதிர் மனுதாரர்**

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. ரோட்ராக்ட் முஹம்மத் இம்ரான் என்பவரது 27.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு 30.04.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0097/17 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் நகராட்சி ஊழியர்கள் எவ்வித அறிவிப்பும் இன்றி காவல் துறையினரையும் அழைத்து வந்து அத்துமீறி கோஷா பெண்களை மிரட்டி தனது வீட்டின் குடிநீர் இணைப்பை துண்டிக்க முற்பட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்பு எண் குறித்து நகராட்சி பணியாளர்கள் முறையான பதில் அளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பதிலறிக்கை தாக்கல் செய்திடுமாறு பேர்ணாம்பட்டு நகராட்சி ஆணையருக்கு அறிவிப்பாணை (எண்.097/2017/ந நாள்:04.05.2017) அனுப்பப்பட்டது. மேலும், இது குறித்து 28.06.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கங்கள் அளிக்குமாறு தெரிவித்து மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையருக்கு அழைப்பாணைகள் (மு.ம.எண்.097/2017 நாள்:23.05.17) தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டன. இதனிடையே பேர்ணாம்பட்டு நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.இ1/371/2017, நாள்:12.06.2017 இம்முறைமன்ற நடுவத்திற்கு 26.07.2017 அன்று வரப்பெற்றது.

மேற்படி அறிக்கையில் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் சொத்துவரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களை செலுத்துமாறு 01.02.2017 முதல் 31.03.2017 வரை ஆட்டோ மூலம் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டதெனவும் 24.03.2017 அன்று தினசரி நாளிதழில் குடிநீர் சிக்கனம்/குடிநீர் வரி செலுத்துதல் குறித்து விளம்பரம் மூலமும் அறிவுறுத்தப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வார்டு எண்.20ல், 10.4.2017 அன்று தண்டோரா மூலமும் விளம்பரப்படுத்தப்பட்டு அறிவிப்பு வழங்கப்பட்டதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 13.4.2017 அன்று நகராட்சி பணியாளர்கள் மூலம் குடிநீர் நிலுவை தொகை செலுத்துமாறு நேரடியாகவும் அறிவிக்கப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரரது இல்லத்திற்கு வெளியில் உள்ள குடிநீர் இணைப்புக்கான குடிநீர் கட்டண நிலுவைத் தொகை ரூ.2400/-ஐ செலுத்துமாறு 13.4.2017 அன்று காலை 11.30 மணியளவில் கோரப்பட்டதெனவும், மனுதாரர் அவகாசம் கோரியதன் பேரில் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படவில்லை எனவும் அன்று மாலை 5 ஆண்டுகளுக்கான குடிநீர் கட்டணம் முழுவதையும் மனுதாரர் ஒரு சேர செலுத்தியுள்ளாரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி பணியாளர்களது பாதுகாப்பு கருதியே காவல் துறையினர் அழைத்துச் செல்லப்பட்டாரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

28.6.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் 2013-ம் ஆண்டு முதல் குடிநீர் இணைப்பு கட்டணம் செலுத்த வேண்டியிருந்ததெனவும் இணைப்பை துண்டிக்க வந்த பிறகு தற்பொழுது இணைப்பு கட்டணம் செலுத்தி விட்டதாகவும் ஒப்புக் கொண்டுள்ளார். நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரியினங்களை உரிய காலத்திற்குள் செலுத்த வேண்டியதன் அவசியம் மனுதாரருக்கு சுட்டிக்காட்டப்பட்டது. மேலும், 28.6.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான பேர்ணாம்பட்டு நகராட்சி ஆணையரும் புகாரில் கூறப்பட்டுள்ள குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படாமல் தொடர்ந்து குடிநீர் விநியோகிக்கப்படுவதாக தெரிவித்தார். இந்நிலையில் இம்முறையீடு குறித்து மேல் நடவடிக்கை ஏதுமில்லை எனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 10-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//---
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 13.7.17

பெறுநர்

1. திரு. ரோட்ராக்ட் முஹம்மத் இம்ரான்.L,
   3/9, தாதா வீதி, பேர்ணாம்பட்டு,
   வேலூர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   பேர்ணாம்பட்டு நகராட்சி, பேர்ணாம்பட்டு,
   வேலூர் மாவட்டம்.